மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

அ.வ.எண்.39/2019

வா.சா.1

தேதி : 07.06.2022

பெயர் : சோமசுந்தர பெருமாள் த/பெ :

வயது : தொழில் :

கிராமம்: மாவட்டம்:

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2022 ம் ஆண்டு ஜுன் 7 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் வாதியின் கணவர். எனது மனைவியாகிய வாதிக்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதால் அவரால் நீதிமன்றத்திற்கு நேரில் வந்து சாட்சியம் அளிக்க முடியாத காரணத்தினால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி தரப்பு முதல் சாட்சியாக நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். அதன் தொடர்ச்சியாக கீழ் கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன். 16.04.1981 தேதியில் எனது மனைவி பெயரில் உள்ள நன்கொடை ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 எனது மனைவி பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 18.01.1965 தேதியிட்ட 1 ம் பிரதிவாதி தாயார் சிவகாமி பெயருக்குள்ள கிரையம் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 4.9.1970 தேதியிட்ட சிவகாமிக்கு அவரது தகப்பனார் ஆறுமுகம் பிள்ளை எழுதிக் கொடுத்த நன்கொடை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 18.10.2010 தேதியிட்டு 1 ம் பிரதிவாதிக்கு அவரது தாயார் சிவகாமி எழுதிக் கொடுத்த நன்கொடை பத்திரம் கணனி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. 18.10.2010 தேதியிட்ட 2 ம் பிரதிவாதிக்கு அவரது சிவகாமி எழுதிக் கொடுத்த நன்கொடை பத்திரம் கணனி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. 27.4.1917 தேதியிட்ட பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர் சண்முகம் பிள்ளை பெயரிலுள்ள அடமானம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7. 24.11.1950 தேதியிட்ட

பிரதிவாதிகளின் மூன் பாத்தியஸ்தர் தெய்வானை அம்மாள் பெயரிலுள்ள நன்கொடை ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8. 25.9.1966 தேதியிட்ட மின்னடி பிள்ளை அம்மாள் ஆறுமுகம் பிள்ளைக்கு எழுதிக் கொடுத்த அடமானம் ஆவணம் நீதிமன்றம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9. 12.6.1967 தேதியிட்ட மின்னடி பிள்ளை அம்மாள் சிவகாமி அம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10. 7.3.2013 முதல் 15.3.2017 வரை பிராது 1வது தபசில் சொத்திற்குரிய வீட்டு வரி ரசீதுகள் 5 எண்ணம் வா.சா.ஆ.11. 17.2.1962 தேதியிட்டு ஆறுமுகம் பிள்ளை பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12. 6.12.1962 தேதியிட்ட மின்னடி பிள்ளை அம்மாளுக்கு தெய்வானை அம்மாள் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13. 5.1.2019 தேதியிட்ட அசல் வழக்கு எண்.14/2013 தீர்ப்பானை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14. 5.1.2019 தேதியிட்ட அசல் வழக்கு எண்.14/2013 தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

S/d–Tmt.S.Muthulakshmi, B.A.M.L.,
District Munsif
Srivaikuntam.